கோறளைப்பற்று பிரதேச சபை – 2017
மட்டக்களப்பு

---

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம;

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் வீதிகள் அமைப்புச் செலவாக செலவு செய்யப்பட்ட தொகைகள் முறையே ரூபா 23,143,962 மற்றும் ரூபா 41,367,764 ஆக மொத்த மீதிகள் ரூபா 64,511,726 நிதிக்கூற்றில் நிலையான சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற, இளைப்பாறிச்சென்ற மற்றும் இறந்த 11 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 369,771 தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பி 5ச சபைகள் நிதி, நிதி நிருவாக நிதி ள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடங்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் இல.1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின்படி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 18,638,507 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 27,630,462 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 8,991,955 வீழ்ச்சியை காட்டுகின்றது.

2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------

சபையினால் பேணப்படும் காசேட்டின்படி மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 30 மில்லியனுக்கு மேல் காசு மீதி காணப்பட்ட போதிலும், இதனை வருமானம் உழைக்கும் வினைத்திறனான செயற்பாடுகளில் இட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 3.3 மில்லியன் தொகை வருமானத்தை இழந்து வந்துள்ளது.

2.3 வருமான முகாமைத்துவம்

-------------------------------

2.3.1 முத்திரைக் கட்டணங்கள்

-----------------------------

மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 15,208,067 தொகையினை அறவிட 2018 மே 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.2 வாடகை நிலுவைகள்

----------------------------

பாசிக்குடாவில் சபையினால் குத்தகைக்கு விடப்பட்ட ஆடைமாற்றும் நிலையம் I,II மற்றும் வாகனதரிப்பிடம் ஆகியவற்றினால் 2013 ஆண்டு தொடக்கம் 2017 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவைகள் ரூபா 6,552,700 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

3.1 செயலாற்றுகை

------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டு ஆடை மாற்றும் நிலையங்கள் I மற்றும் II, குத்தகை எடுத்தவரினால் ரூபா 673,500 செலுத்த வேண்டி இருந்தவருக்கே குத்தகை நிலுவை அறவீட்டைப் பெற்றுக் கொள்ளாமல் மீண்டும் அவருக்கு 2018 ஆண்டிலும் ஆடைமாற்றும் நிலையம் I மற்றும் II வழங்கப்பட்டிருந்தது

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவுசெய்யப்பட்ட உல்லாச விடுதிகளிடமிருந்து அவற்றின் மொத்த வருமானத்தில் 01% தீர்வையாக அறவிடப்படவேண்டிய போதிலும், இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவு

செய்யப்பட்டு பாசிக்குடா பிரதேசத்தில் இயங்கி வரும் பதினான்கு முன்னணி உல்லாச ஹோட்டல்களிலிருந்து அறவிட வேண்டிய தீர்வைக் கட்டணம் கணக்காய்வுத் திகதியான 2018 மே 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017ம் ஆண்டில் சபையின் எல்லைக்கு உட்பட்ட வைத்தியசாலையில் பிறந்த 1,895 பிள்ளைகளில் 261 பிள்ளைகள் நிறை குறைந்த பிள்ளைகளாக பிறந்திருந்தது. ஆனால் சபையினால் வரவு செலவு திட்டத்தில் ரூபா 50,000 தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், சபையினால் ரூபா 30,450 தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கிய நலனுக்கான செயற்திட்டத்திற்கு செலவு செய்யாமல் டெங்கு ஒழிப்புக்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலும் மேற்படி வைத்தியசாலையில் பிறந்த 1,308 பிள்ளைகளில் 166 பிள்ளைகள் நிறை குறைந்த பிள்ளைகளாக பிறந்திருந்தது. ஆனால் சபையினால் வரவு செலவு திட்டத்தில் ரூபா 150,000 தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் சபையினால் ரூபா 63,850 தாய் சேய் நலனுக்கான செயற்திட்டத்திற்கு செலவு செய்யப்படாமல் வேறு திட்டத்தின் மேற்பார்வைக்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு உரிய காணியில் புதிய சந்தைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,290,000 பெறுமதியில் 2016 ஒக்டோபர் 15 ஆந் திகதி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரரால் குறித்த காணியில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 924,053 பெறுமதியான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் குறித்த காணி அப்பிரதேசத்திலுள்ள வேறு ஒருவருக்கு சொந்தமானது என உரிமை கோரப்பட்டதனால் நிர்மாண வேலைகள் ஒப்பந்தக்காரரால் கைவிடப்பட்டது. எனினும் சபையானது உரிய நடவடிக்கைகளை எடுத்து காணியைப் பொறுப்பேற்று வேலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையானது தனக்கு உரித்தான காணிகளை இனங் கண்டு அவற்றை அடையாளப்படுத்தி வைத்திருக்க உரிய நடவடிக்கை மீளாய்வாண்டிலோ அல்லது அதனோடு முந்திய ஆண்டிலோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நொவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், தற்காலிக/ அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நிதி ஒதுக்கீட்டிற்கான அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரே ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய போதிலும், இதற்கு முரணாக முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2015 இல் 15 ஊழியர்களும் 2017 இல் 48 ஊழியர்களுமாக மொத்தம் 63 ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆம் திகதி 02/2011 இலக்க ஓய்வூதிய திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைய/ தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களிடமிருந்து 8% பங்களிப்புப் பணத்தை அறவிட்டு அதனுடன் உள்ளூராட்சி நிறுவனத்தின் பங்களிப்பான 12% சதவீதத்தை சேர்த்து அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைத்தல்

வேண்டும். எனினும், மேற்படி ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 63 ஊழியர்களுக்கு அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------

பாதைகளுக்கு கிறவல் இடல்

-----------------------------------

நிதி ஆணைக் குழுவின் 2016/01 ஆம் இலக்க 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய சுற்றிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன நிதியின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது உள்ளூராட்சி அதிகார சபை வீதிகளை அமைக்கும் போது கிறவல் இடுதல் மற்றும் தற்காலிக பாதை அமைத்தல் ஆகியவற்றை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் பூசுதல் அல்லது கொங்கிறீட் இடுதலை மேற்கொள்ள வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் சபையினால் 03 வீதிகளுக்கு ரூபா 5,181,100 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது.

4 கணக்காளிப் பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------

4.1 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

-----------------------------------------------------------------------------------------

சபையின் விசேட ஆணையாளரிடம் நலன்விரும்பி ஒருவரினால் 1980 யூலை 06ம் திகதி 4772 ஆம் இலக்க உறுதி மூலம் சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 14 பேர்ச் அளவான காணியைப் பொறுப்பேற்று பராமரிக்கத் தவறியதன் காரணமாக தனிப்பட்டவர்களால் அக்காணி ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றதை கடந்த ஆண்டின் எமது அறிக்கையிலும் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் சபையினால் இன்று வரை எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|---|
| (அ) | வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | பாதைகளை அமைக்கும் போது நிதி ஆணைக்குழுவின் 2016/01 சுற்று நிருபத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சொத்துக்கள் | சபைக்குரிய காணிகளை இனங் கண்டு அவற்றை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |